**செய்தி வெளியீடு எண்: 584** **நாள்:13.08.2020**

# செய்தி வெளியீடு

தமிழ்மொழி வளர்ச்சிக்கெனத் தமிழக அரசால் தோற்றுவிக்கப்பட்ட உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் பல்வேறு கல்வி மற்றும் ஆராய்ச்சிப் பணிகள் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

அவ்வகையில், தமிழ்ப் பல்கலைக்கழக ஏற்புடன், தமிழ் முதுகலை (M.A. Tamil), ஐந்தாண்டு ஒருங்கிணைந்த தமிழ் முதுகலை (Five year Integ. P.G. M.A Tamil) மற்றும் தமிழ் ஆய்வியல் நிறைஞர் (M.Phil.) பட்ட வகுப்புகள் இந்நிறுவனத்தில் ஆண்டுதோறும் தொடர்ந்து நடத்தப் பெற்று வருகின்றன. 2020–21ஆம் கல்வியாண்டிற்கான மேல்குறிப்பிட்டுள்ள பட்டப் படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கை தொடர்பாக கீழ்க்காணும் செய்தியை தமிழ் (ம) ஆங்கில நாளிதழ்களில் செய்தியாக வெளியிட ஏற்பாடு செய்துதவ தங்களை அன்போடு கேட்டுக் கொள்கின்றேன்.

“உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் தமிழ்ப் பல்கலைக்கழக ஏற்புடன் 2020–21ஆம் கல்வியாண்டிற்கான தமிழ் முதுகலை (M.A. Tamil), ஐந்தாண்டு ஒருங்கிணைந்த தமிழ் முதுகலை (Five year Integ. P.G. M.A Tamil) மற்றும் தமிழ் ஆய்வியல் நிறைஞர் (M.Phil.) மாணவர் சேர்க்கை தொடங்கப்பெறவுள்ளது. கட்டண விவரம் :

| | | |
|---|---|---|
| தமிழ் ஆய்வியல் நிறைஞர் வகுப்பு (M.Phil.) | – | ரூ. 4600/– |
| தமிழ் முதுகலை (M.A. Tamil) | – | கட்டணம் இல்லை |
| ஐந்தாண்டு ஒருங்கிணைந்த தமிழ் முதுகலை<br>Five year Integ. P.G. M.A Tamil) | – | ரூ. 2400/– |

விண்ணப்பங்கள் நிறுவன வலைத்தளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். அஞ்சல் வழியிலும் பெற்றுக் கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் | – | 31.08.2020 (திங்கட் கிழமை) |
| நுழைவுத் தேர்வு நடைபெறும் நாள்<br>(தமிழ் முதுகலை (M.A. Tamil) மற்றும்<br>தமிழ் ஆய்வியல் நிறைஞர் (M.Phil.) வகுப்பிற்கு மட்டும் ) | – | பின்னர் தெரிவிக்கப்படும் |
| வகுப்பு தொடங்கப்பெறும் நாள் | – | பின்னர் தெரிவிக்கப்படும் |

மாணவ, மாணவியர்க்குத் தனித் தனியே தங்கும் விடுதி வசதி உள்ளது.

மேலும் விவரங்களுக்கு, இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், இரண்டாம் முதன்மைச் சாலை, மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம், தரமணி, சென்னை – 113, பேசி : 044–22542992.

சேர்க்கைத் தொடர்பான விதிமுறைகள்/தகவல்கள் www.ulakaththamizh.in என்ற இணைய முகவரியில் தெரிந்து கொள்ளலாம்.

தமிழ் முதுகலை வகுப்பில் சேர்க்கைப் பெறும் மாணவர்களில் 15 பேருக்கு தமிழக அரசால் கல்வி உதவித் தொகையாகத் திங்கள் தோறும் தலா ரூ,2000/– வழங்கப்படும்.

எனவே, மேற்சுட்டிய செய்தியினை மாணவர்கள் பயன்பெறும் வகையில் 16.08.2020 மற்றும் 23.08.2020 (ஞாயிற்றுக் கிழமை) ஆகிய நாட்களில் தமிழ்நாட்டில் வெளிவரும் அனைத்து தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களில் வெளியிட்டு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் வளர்ச்சிக்கு உதவிடுமாறு தங்களை அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**